முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை

முன்னிலை திருமதி பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,

முதன்மை சார்பு நீதிபதி

ம.சா.1 நாள்.16.03.2023

| MCOP No. | 165/2021 | | |
|---|---|---|---|
| பெயர் | ராணி | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு குறுக்கு விசாரணை

நான் கிழக்கிலிருந்து மேற்காக நடந்து சென்றேன். கார் மேற்கிலிருந்து கிழக்காக வந்துகொண்டிருந்தது. கார் முதலில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் மீது மோதி பின்னர் என் மீது மோதிவிட்டது. நான் நடந்து சென்ற இடத்திலிருந்து எவ்வளவு துாரத்தில் மோட்டார் சைக்கிள் வந்தது என்றால் அது சொல்லத் தெரியவில்லை. நான் சரியாக பார்த்து வந்திருந்தால் மோட்டார் சைக்கிளில் இடித்த நிலையில் வந்த கார் என்னை மோதிவிடாமல் நான் நகர்ந்திருக்க வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல. என்னுடன் நடந்த வந்த தையல்நாயகி என்பவர் இறந்துவிட்டார். எனக்கு எலும்பு முறிவிற்கு அறுவை சிகிச்சை செய்யப்படவில்லை. நான் விவசாய கூலி வேலை பார்க்கிறேன். நான் மாதம் ரூ.15,000/- சம்பாதிப்பதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ 7 மருத்துவ பில் 17.09.2021 தேதியிட்ட பில் தொகை ரூ.750/-ரூபாய் செலவு செய்ததற்கு எனது பெயர் அதில் இல்லை என்றால் சரிதான். தற்காலிக ஊனத்திற்கு 35 சதவீதம் தான் மிக அதிகமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் மீது மோதிய காரின் ஓட்டுநரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் எனக்கு இழப்பீடு 2ம் எதிர்மனுதார் கொடுக்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல. எனக்கு எலும்பு முறிவு சேர்ந்துவிட்டது என்றும்., எனக்கு ஊனம் இல்லை என்பதால் இழப்பீடு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.